**cross**

**O.S.No.127/2015**

**Date: 30.07.2026**

**வா.சா.1 பாலசுப்பிரமணியன்**

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு தாக்கல் செய்யும் போது இறப்பு சான்று என்கைவசம் இருந்தது என்றால் சரிதான். ரத்து செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் அசல் என்னிடம் இல்லை. அந்த உயில் ஆவணம் எங்கு உள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு எதிராக எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணங்களை பிறப்பித்து கொடுக்கும் போது ராமையா செட்டியார் நல்ல மனநிலையில் இல்லாமல் இருந்தார் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. ராமையா செட்டியார் இறந்ததை பதிவு செய்வதற்கான தகவல் யாரால் தெரிவிக்கப்பட்டது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இறப்பு சான்றை யார் விண்ணப்பித்து பெற்றது என்று கேட்டால் நான் தான். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும். என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.